# ஒளியாம் இறையே வாராய்

ஒளியாம் இறையே வாராய்
எளியோர் நெஞ்சம் தனிலே
ஒளியாம் இறையே வாராய்

விண்ணில் வாழும் விமலா
மண்ணில் வாழும் மாந்தர் } (2)
உம்மில் என்றும் வாழ
எம்மில் எழுமே இறைவா
ஒளியே எழிலே வருக (2)

ஒளியாம் இறையே வாராய்
எளியோர் நெஞ்சம் தனிலே
ஒளியாம் இறையே வாராய்

நீரும் மழையும் முகிலால்
பூவும் கனியும் ஒளியால் } (2)
உயிரும் உருவும் உம்மால்
வளமும் வாழ்வும் உம்மால்
ஒளியே எழிலே வருக (2)

ஒளியாம் இறையே வாராய்
எளியோர் நெஞ்சம் தனிலே
ஒளியாம் இறையே வாராய்